இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 15-06-2025

# பெருந்துயரம்!

ஜூன் 12 என்பது பெருந்துயரமான நாளாக அமைந்துவிட்டது. உலகையே உலுக்கி விட்டது அந்தச் செய்தி. கேள்விப்பட்டதுமே உலகமே துயரத்தில் ஆழ்ந்து விட்டது. 'அனைவரும் நலம்' என்ற செய்தி வராதா என்று அனைவரும் ஏங்கி இருந்தார்கள். 241 பேர் மரணம் என்பதுதான் பெருந்துயரச் செய்தியாக வந்து சேர்ந்தது.

**அகமதாபாத் சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம் இந்தியாவில் ஏழாவது பரபரப்பான விமான நிலையம் ஆகும். இங்கு இருந்து மதியம் 1.38 மணிக்கு லண்டன் புறப்பட்ட 'ஏர் இந்தியா' பயணிகள் விமானம் (போயிங் 7878) ஒன்று, புறப்பட்ட சில நிமிடங்களில் விபத்துக்குள்ளானது. அகமதாபாத் விமான நிலையம் அருகே உள்ள குடியிருப்புப் பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கி தீப்பற்றியது. தரையில் இருந்து 425 அடி உயரத்தில், புறப்பட்ட ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் விமானம் சிக்னலை இழந்ததாக ஃப்ளைட் ரேடார் 24 தெரிவித்துள்ளது. விமான கண்காணிப்புத் தரவின்படி, விமானம் தரையில் இருந்து 425 அடி உயரத்தில் இருந்தபோது கிடைத்ததுதான் கடைசி சிக்னல். விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்கு, விமானி 'மேடே அழைப்பு' (Mayday call அவசர அழைப்பு) விடுத்தார். அதன் பிறகு விமானியிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.**

**அந்த விமானத்தில் 242 பேர் இருந்தார்கள். இருந்த பயணிகளில் 169 பேர் இந்தியர்கள். 53 பேர் இங்கிலாந்து நாட்டவர்கள். கனடாவைச் சேர்ந்தவர் ஒருவர். 7 பேர் போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்தவர்கள். இதில் 100 பேர் பெண்கள். 14 பேர் குழந்தைகள். 2 பேர் விமானிகள். 10 பேர் ஊழியர்கள்.**

**அகமதாபாத் விமான விபத்தில் குஜராத் மாநில முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உயிரிழந்தார். ஒரே ஒருவர் மட்டும் உயிர் பிழைத்து விட்டார். 11 ஏ என்ற இருக்கையில் பயணம் செய்தவர் அவர். விஸ்வாஷ் குமார் ரமேஷ் என்ற அவர் பிரிட்டன் குடியுரிமை பெற்றவர். "விமானம் புறப்பட்ட 30 விநாடிகளுக்குப் பிறகு, ஒரு பெரிய சத்தம் கேட்டது, பின்னர் விமானம் விபத்துக்குள்ளானது. எல்லாம் மிக விரைவாக நடந்தது" என விஸ்வாஷ் கூறினார்.**

ஏர் இந்தியா நிறுவனத்தின் இந்த விபத்தில் தான் போயிங் 787 விமானம் முதல் முறையாக விபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த மாடல் விமானம் 14 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆறு வாரங்களுக்கு முன்பு தான் விமானத் தயாரிப்பு நிறுவனம், ஒரு பில்லியன் பயணிகளை ஏற்றிச் சென்று ஒரு மைல் கல்லை எட்டியதாகத் தெரிவித்தது.

பொதுவாக விமானங்கள் தரையிறங்கும் போது இதுபோன்ற விபத்துகள் இதுவரை ஏற்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு துபாயில் இருந்து வந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் கோழிக்கோடு விமானநிலையத்தில் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் 21 பேர் உயிர் இழந்தார்கள். விமானம் விழுந்து ஓடுபாதையில் இருந்து சறுக்கி இரண்டாக உடைந்தது. அதே போல் 2010 ஆம் ஆண்டு மங்களூரில் ஓடுபாதையை விட்டு விலகி ஏற்பட்ட விபத்தில் 158 பேர் உயிர் இழந்தார்கள். 2000 ஆம் ஆண்டு பாட்னா விபத்தும் தரையிறங்கும் போது தான் ஏற்பட்டது. 60 பேர் உயிர் இழந்தார்கள். ஆனால் இப்படி பயணம் புறப்பட்டதும் நடுவானில் சிக்கலாகி தீப்பிடித்தும், உடைந்தும் நொறுங்கியதும் மிகமிக அரிதான நிகழ்வே ஆகும்.

**விமானப் போக்குவரத்து மிகமிக எளிதானதாக மாறி வரும் இந்தக் காலத்தில் இதுபோன்ற விபத்து அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. சிவில் விமானப் போக்குவரத்தில் வியத்தகு அளவில் வளர்த்துவிட்டோம் என்று பிரதமர் மோடி அரசு சொல்கிறது. 2014 ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் இருந்த நிலையில் இப்போது 160 ஆக உயர்த்தி விட்டதாகச் சொல்கிறார்கள். உலக அளவில் அதிக அளவிலான பயணிகளைக் கையாளும் விமானப் போக்குவரத்துச் சந்தைகளில் இந்தியா மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி.) விமானப் போக்குவரத்துத் துறையின் பங்கு 1.5 விழுக்காடாக உள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டு இந்தியப் பொருளாதாரத்தில் இத்துறையின் பங்கு ரூ.4.57 லட்சம் கோடியாக இருந்தது. 2024 ஆம் ஆண்டில் 13 லட்சம் விமானச் சேவைகள் இயக்கப்பட்டன. இதில் பெரும்பாலானவை (11 லட்சம்) உள்நாட்டு விமானச் சேவை ஆகும்.**

**அதே நேரத்தில் விமான நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றதும், விமான நிலையங்களை விற்றதும் நடந்தது. இது விமானப் போக்குவரத்தில் தங்களுக்கு இருக்கும் கடமையில் இருந்து ஒன்றிய அரசு நழுவியது ஆகும்.**

விமானம் விபத்துக்கு உள்ளாகி, இவ்வளவு பேர் மரணம் என்பது வருத்தம் தோய்ந்த செய்தியாகப் பரவியதே தவிர, இதற்கான காரணத்தை;யார்காரணம்,யாரின்குறைபாடுஎன்றவிமர்சனங்களைத் தூண்டவில்லை. தனியார் விமானம், தனியார் விமான நிலையம், தனியார் ஊழியர்கள் என்ற நிலையில் யாரைக் குறை காண்பது? யாரைப் பொறுப்பு ஆக்குவது? யாரைக் கேள்வி கேட்பது? அடுத்த தவறு நடக்காது என்று யார் உத்தரவாதம் தருவது?

**விமானப் போக்குவரத்துத் துறையானது நவீனமயம் ஆகி வருகிறது. ஆளில்லா விமானங்கள், மின்சார விமானங்கள் என்றெல்லாம் பேசப்படும் காலம் இது. ஆனால் இறங்கும் போது தடம் புரள்வதும், ஏறும் போது தீப்பிடிப்பதும் ஆன சாதாரணக் குறைபாடுகளை எப்படித் தடுக்கப் போகிறார்கள்? நவீன தொழில் நுட்பமானது பயணிகளின் பாதுகாப்பை எப்படி உறுதி செய்யப் போகிறது?**

••

## புதுடெல்லியில் — 'மதராசி குடியிருப்புப் பகுதி' இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் குடியிருப்பு வசதி ஏற்படுத்தித் தாரீர்!

# டெல்லி முதல்வர் ரேகா குப்தாவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

## மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு நேரில் வழங்கினார்!

**புதுடெல்லி, ஜூன் 15-**

**டெல்லியில், மதராசி குடியிருப்பு பகுதி இடிக்கப்பட்டதால், பாதிக்கப் பட்டுள்ள தமிழர்களுக்கு, குடியி ருப்பு வசதியை ஏற்படுத்தி தர வலி யுறுத்தி, டெல்லி முதலமைச்சர் ரேகா குப்தாவுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தை, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, டெல்லி முதலமைச்சரிடம் நேரில் வழங்கினார்.**



தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்களை நேற்று முன்தினம் (13.6.2025) புதுதில்லியில், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்கள் சந்தித்து, தில்லி ஜங்புரா மதராசி கேம்ப் பகுதியில் உள்ள தமிழர்களின் வீடுகள் இடிக்கப்பட்டதையொட்டி, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தருதல், தமிழ்வழி பள்ளி அமைத்தல், வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்குவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

டெல்லி முதல்வர் ரேகா குப்தாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த ஒன்றாம் தேதி, டெல்லியின் ஜங்புரா பகுதியில் உள்ள மதராசி குடியிருப்பு இடிக்கப்பட்டதாகவும், டெல்லி பொருளாதாரத்திற்கு பல ஆண்டுகளாக பங்களிப்பு செய்த 370 தமிழ்க் குடும்பங்கள், வீடற்றவர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் மாறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குடியிருப்புகள் இடிக்கப்பட்டதால், 189 குடும்பங்களுக்கு, நரேலா பகுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கான அடுக்குமாடி குடியிருப்புகளை (EWS) ஒதுக்குமாறும், அங்கு அத்தியாவசியத் தேவைகளான மின்சாரம், தெருவிளக்கு, குடிநீர், மருத்துவ வசதி, சாலை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகள் படிப்பைத் தொடர வசதியாக, அருகே உள்ள பள்ளிகளில் சேர்க்கையை அனுமதிக்கவும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், நியாய விலைக்கடைகள், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தரவும் நீதிமன்றம் உத்தரவிட்டதாக முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நரேலாவில் 189 குடும்பங்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அடிப்படை வசதிகள் முழுமையாக வழங்கப்படாததால், அங்கு மக்கள் வசிக்க முடியாத நிலையில் இருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், 150க்கும் மேற்பட்ட குழந்தைகளின் கல்வியைத் தொடருவதற்கான வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படவில்லை என குறிப்பிட்டுள்ளார். எஞ்சியுள்ள 181 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படாததால், அவர்கள் ஆதரவற்ற நிலையிலேயே இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ள 189 குடும்பங்களுக்கு உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதுடன், எஞ்சிய 181 குடும்பங்களுக்கு குடியிருப்புகளை ஒதுக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இடப்பெயர்வால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதுடன் மானியத்துடன் கூடிய குறு தொழில்கள் தொடங்க உதவ வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த விவகாரத்தை டெல்லி நிர்வாகம் மனிதநேயத்துடன் கையாளும் என நம்புவதாகவும், இடம்பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களின் கண்ணியமான மறுவாழ்வை உறுதி செய்ய, அனைத்து வகையிலும் உதவ தாம் தயாராக இருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்துள்ளார்.

# 'நெய்தல் கலைத் திருவிழா 2025' முன்னேற்பாடு பணிகள்! கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு!

தூத்துக்குடி, ஜூன் 15-

தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிகம் போன்றவற்றைப் பறைசாற்றும் வகையில் தூத்துக்குடியில் ஜூன் 13 முதல் 15 ஆம் தேதி வரை 4-வது நெய்தல் கலைத்திருவிழா தூத்துக்குடி வ.உ.சி கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு, செய்யப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி 12.06.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெய்தல் கலைத் திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 300-க்கும் மேற்பட்ட மண் சார்ந்த கலைஞர்கள், தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். இந்த விழாவானது மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும்.

இந்த விழாவில் கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பறையாட்டம், குச்சியாட்டம், துடும்பாட்டம், ஜிம்பளா மேளம், பொய்க்கால் குதிரை, கிராமிய நிகழ்ச்சி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெய்தல் திருவிழாவின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பாரம்பரிய உணவு வகைகளை அறிந்து கொள்ளும் வகையில் 20-க்கும் மேற்பட்ட அரங்குகள் மற்றும் நபார்டு சார்பில் 30 க்கும் மேற்பட்ட காட்சிப்படுத்தப்பட உள்ளது.

முதல் நாளான ஜூன் 13-ம் தேதி தூத்துக்குடி மாவட்ட அரசு இசைப் பள்ளி சார்பில் நிகழ்ச்சி தொடக்க விழா, மங்கல இசை நிகழ்ச்சி, சார்பில் அபிநயா நிருத்தாலய நடன பள்ளியின் சமர் கலைக்குழு சார்பில் பரதநாட்டியம். பால் ஜேக்கப்பின் ஃபங்கி போதியின் சென்னை சங்கமத்தின் (2025) தொடக்க விழா இசை. சோல்டவுட் இசைக்குழுவின் ஒளி இசை நிகழ்ச்சி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தைத் தவிர்க்க உடனடியாக அமைத்திடுவீர்

# புறநகர் மற்றும் பறக்கும் ரயில்களில் தானியங்கிக் கதவுகள்!

## ஒன்றிய அமைச்சருக்கு - தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

*சென்னை, ஜூன் 15-*

*புறநகர் மற்றும் பறக்கும் ரயில்களில் தானியங்கி கதவுகளை உடனடியாக அமைத்திடக்கோரி மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஒன்றிய அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.*

*சமீபத்தில், மகாராஷ்டிராவின் தானே மாவட்டத்தில், உள்ளூர் ரயிலிலிருந்து தவறி விழுந்ததில், ஒரு ரயில்வே காவலர் உட்பட 4 பேர் உயிரிழந்து, பலர் படுகாயமடைந்த செய்தி நாடு முழுவதும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து ஒன்றிய ரயில்வே துறை, மும்பை மாநகரில் இயங்கும் அனைத்து புறநகர் ரயில்களிலும் தானியங்கி கதவுகளை அமைக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ளும் என்று அறிவித்தது.*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பல ஆண்டுகளாக ஒன்றிய ரயில்வே அமைச்சகத்துக்கு கடிதம் வாயிலாகவும், பாராளுமன்றத்திலும், தென்னக ரயில்வே கோட்ட ஆலோசனை கூட்டங்களிலும், அனைத்து புறநகர் ரயில்களில் தானியங்கி கதவுகளை அமைக்கக்கோரி வலியுறுத்தி வந்த நிலையில், மீண்டும் ஒன்றிய அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மும்பை மாநகரில் மட்டுமல்லாமல் நாடுமுழுவதும் பயன்பாட்டிலுள்ள அனைத்து புறநகர் ரயில்களிலும் தானியங்கி கதவு வசதியை அமல்படுத்த வலியுறுத்தியுள்ளார்.*

*அதன் விவரங்கள் பின்வருமாறு :-*

*புறநகர் மற்றும் உள்ளூர் ரயில்களில் அடிக்கடி ஏற்படும் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்க்க, தானியங்கி கதவு அமைப்புகளை அமல்படுத்த வேண்டுமென 17.08.2019 மற்றும் 31.05.2022 ஆகிய தேதிகளில் கடிதம் வாயிலாகவும், 7.12.2022 மற்றும் 12.12.2022 ஆகிய தேதிகளில் நாடாளுமன்றத்திலும் வலியுறுத்தினேன். பட்ஜெட் முன்மொழிவுகளுக்கு ஆலோசனைகள் கேட்டபோது மாண்புமிகு நிதியமைச்சரிடம், சென்னையில் புறநகர் ரயில்களில் படிகளில் பயணம் மற்றும் அதிகப்படியான கூட்டம் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகளை மேற்கோள்காட்டி இப்பரிந்துரையை முன்வைத்தேன். மேலும், சென்னை இரயில்வே கோட்டத்தின் வளர்ச்சி நடவடிக்கை மற்றும் பயணிகள் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக தென்னக இரயில்வே அலுவலகத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டங்களிலும் பல முறை தெற்கு ரயில்வே பொது மேலாளரிடம், தானியங்கி கதவு அமைப்புகளின் தேவைகள், நெரிசல் மிகுந்த நேரங்களில் ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான பெட்டிகளை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினேன்.*



*சமீபத்தில், மகாராஷ்டிராவின் தானே மாவட்டத்தில், உள்ளூர் ரயிலிலிருந்து தவறி விழுந்ததில், ஒரு ரயில்வே காவலர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் இப்பிரச்சினைக்கு அவசரத் தீர்வு காண்பதின் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.*

*இதற்கு தீர்வு காணும் விதமாக, ரயில்வே வாரியம், 2026 ஜனவரிக்குள் மும்பை புறநகர் ரயில்வேயில் தானியங்கி கதவு அமைப்புகளுடன் கூடிய புதிய ரயில் பெட்டிகளை அறிமுகப்படுத்துவதாக உறுதியளித்துள்ளது. இது வரவேற்கத் தக்கதாக இருந்தாலும், இப்பிரச்சினைக்கு இது நிரந்தர தீர்வாக அமையாது.*

*இப்பிரச்சினை மும்பை மட்டுமின்றி சென்னை, கொல்கத்தா, டெல்லி போன்ற அனைத்து பெருநகரங்களிலும் புறநகர் ரயில்களில் பயணிக்கும் மக்களுக்கு தினசரி சவாலாக உள்ளது. ஆகையால் இந்த பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மும்பையில் மட்டுமே செயல்படுத்துவது என்பது நாடு முழுவதும் உள்ள பல லட்சக்கணக்கான குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாது. ஒரு தனிப்பட்ட நடவடிக்கையாக கருதாமல், புறநகர் ரயில் போக்குவரத்து துறையில், தேசிய அளவிலான பாதுகாப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ள இதை ஒரு தொடக்கமாக அமைச்சகம் கருத வேண்டும்.*

*ரயில்வே வாரியம், தற்போது பயணிகளின் பயன்பாட்டிலுள்ள புறநகர் ரயில் பெட்டிகளிலும், இனி புதிதாக உருவாக்கப்படும் புறநகர் ரயில் பெட்டிகளிலும் தானியங்கி கதவுகளுடன் மறு வடிவமைப்பு செய்ய ஒரு விரிவான திட்டத்தை உடனடியாக உருவாக்க வேண்டும்,*

*மேலும் ரயில்வே அமைச்சகம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள உறுதியளிக்க வேண்டும்:*

*அனைத்து பெருநகரங்களிலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் புறநகர் ரயில் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.*

*ஒவ்வொரு ரயிலிலும் பயணிகளின் எண்ணிக்கையின் தேவைக்கு ஏற்ப போதுமான பெட்டிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.*

*பாதுகாப்பாகவும், திறமையாகவும் ரயில் சேவைகளை கையாள Smart Signaling மற்றும் Capacity Planning திட்டமிடுதலில் முதலீடு செய்ய வேண்டும்.*

*தாமதமாக கொண்டுவரப்படும் சோதனை திட்டங்களோ, மாநிலம் வாரியாக அமல்படுத்தப்படும் திட்டங்களோ, அன்றாடும் புறநகர் ரயில்களை நம்பி வாழும் பொதுமக்களின் பாதுகாப்பை இனியும் கேள்விக்குறியாக்குவது ஏற்புடையதல்ல. எதிர்காலத்தில் இது போன்ற துயரச் சம்பவங்கள் நடைபெறா வண்ணம், தொலைநோக்கு பார்வையோடு, தீர்க்கமான முடிவுகளை அமைச்சகம் மேற்கொள்ளும் என நம்புகிறேன்.*

*இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.*